## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2016/2017 (நவம்பர்/டிசெம்பர் 2019)

# FAS 2233 Art of Film Appreciation and Tamil Films

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – I

01. 'தமிழ்த் திரைப்படங்கள் பொழுதுபோக்குத் தளத்திலிருந்து மாத்திரம் நோக்கப்பட வேண்டியவை அல்ல. அவற்றுக்கு வேறு அரசியல் பரிமாணங்களும் உண்டு' விவாதிக்குக.

02. முழுநீளத் திரைப்படங்கள் பொதுவில் கொண்டிருக்கும் கதையாடல் கட்டமைப்பை, அதன் முக்கிய கூறுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

03. முக்கியமான கமெரா எடுப்புக்கள் (Shots), பார்வை நிலைகள் (Angles of View), அசைவுகள் (Movements) ஆகியவற்றை உரிய வரைபடங்களின் துணைகொண்டு விளக்குக.

(மொத்தம் 2x14=28 புள்ளிகள்)

## பகுதி – II

04. 'திரைப்படம் இயக்குநரின் ஊடகமெனக் கூறப்பட்டாலும், அது ஒரு கூட்டுப் படைப்பாகவே கருதப்பட வேண்டும் எனவும் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன' திரைப்பட உருவாக்கத்தில் இடம்பெறும் முக்கிய பணிகளைப் பட்டியற்படுத்தி, அவற்றுக்குப் பொறுப்பாகச் செயற்படுபவர்களின் வகிபங்குகளை விளக்குக.

05. திரைப்படமொன்றின் கதைக்கும் திரைக்கதைக்குமான பண்பு மாற்றங்களை எடுத்துக் கூறுக.

**அல்லது**

திரைப்பட உருவாக்கத்தில் படத்தொகுப்பு பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க.

(ம.ப.பா)

06. ‘திரைப்படங்களைக் குறியீட்டுத் தளத்தில் அணுகுவதன் மூலமே பார்வையாளர்களிடம் ஏற்படுத்தவல்ல தாக்கங்களை அறிய மு திரைப்படமொன்றை எவ்வாறு குறியீடுகள் வழியாக வா பார்க்கலாமென விளக்குக.

07. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை நீங்கள் திரைப்படங்களிலிருந்தான பொருத்தமான உதாரணங்கள் விளக்குக.

a. திரைப்படமொன்றில் விளாதிமிர் புரொப்பின் செயற்பண்புகள்
b. ஒரே இயக்க மையம் கொண்ட எதிர்நிலைகள்
c. மார்க்சிய அணுகுமுறை
d. தமிழ்த் திரைப்படங்களில் வழக்கம் மாறாத் தன்மைகள்
e. திரைப்படங்கள் வழியான பயன்களும் மகிழ்வூட்டுதல்களும்

(மொத்தம் 3x24=72 புள்

*****